# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1862/12 - 2014 මැයි මස 16 වැනි සිකුරාදා - 2014.05.16

*1862/12 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்*

*1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2014 ஆம் ஆண்டிற்குரிய தேருநர் இடாப்புக்களின் திருத்தம் 2014 மே 16 ஆந் திகதி ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.*

*2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் அவர்களின் அலுவலகங்களிலும் கீழ்க்காணும் அலுவலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும்.*

| ***இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள்*** | ***பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பாகங்கள்*** |
|---|---|
| *கொழும்பு மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகம் (கொழும்பு மாவட்டம், மாநகர சபைப் பிரதேசங்கள்), இல. 395, பழைய கோட்டே வீதி, இராஜகிரிய.* | *கொழும்பு மாவட்டத்தின் மாநகர சபைப் பிரதேசங்களில் வதியும் எல்லா தேருநர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள்* |
| *கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், இல. 395, பழைய கோட்டே வீதி, இராஜகிரிய.* | *கொழும்பு மாவட்டத்தின் மாநகர சபைப் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வதியும் எல்லா தேருநர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள்* |
| *ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்.* | *தேர்தல் மாவட்டத்திற்கான முழு தேருநர் இடாப்பின் பிரதி.* |
| *ஒவ்வொரு பிரதேச செயலகம்.* | *பிரதேச செயலாளர் பிரிவினுள் வதியும் தேருநர்களின் பெயர்கள் அடங்கிய இடாப்பின் பாகங்கள்* |
| *ஒவ்வொரு உள்ளூராட்சிமன்ற அலுவலகங்கள்.* | *ஒவ்வொரு உள்ளூராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களினுள் வதியும் சகல தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள்* |
| *ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம்.* | *கிராம அலுவலர் பிரிவிற்குள் வதியும் எல்லாத் தேருநர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பாகங்கள்.* |

3. ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தின் ஒரு வாக்காளராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் மேற்கூறப்பட்ட தேருநர் இடாப்புக்களில் பதியப்பட்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

4. 2014 ஆம் ஆண்டிற்காக தேருநர்களாக பதியப்படுவதற்கான தகைமையைப் பெற்றிருக்கும் ஆட்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவலர்களினால் பிரதான குடியிருப்பாளர்களுக்கு உரிய படிவங்கள் 2014.05.16 ஆந் திகதி முதல் விநியோகஞ் செய்யப்படும். அப்படிவங்களின் மூலம் தனது இல்லத்தில் தேருநர்களாக பதிவு செய்யப்படுவதற்கான தகைமையைப் பெற்றிருக்கும் சகலரினதும் உரிய விபரங்களை பிழையின்றி விரைவாக வழங்குவதன் மூலம் பிரதான குடியிருப்பாளர்கள் கணக்கெடுக்கும் அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2014, மே 16.

5-771

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.